Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 09 | [20 - 02 - 1998] | சனிக்கிழமை | ஓசை 02

## நீர் ஒவ்வாமையினால் பலருக்கு கண்ணோய்

அண்மைக் காலத்தில் நீர் ஒவ்வாமையினால் பலருக்கு கண்ணோய் ஏற்பட்டுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடல்நீர், குளத்துநீர், என்பன கண்களுக்குள் சென்றமையால் ஒவ்வாமை காரணமாக கண்ணுக்குள் புண் ஏற்பட்டு வருகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்ட பலர் யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் அனேகமானோர் மீனவர்களாகவும் படகோட்டிகளாகவும் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 10,000 பேரை ராணுவத்திற்கு திரட்ட அரசாங்கம் முடிவு

## 3 மாதப் பயிற்சி கிடைக்குமாம்

(கொழும்பு)

இராணுவத்திற்கு மேலும் பத்தாயிரம் பேரை சேர்த்துக்கொள்ள சிறிலங்கா அரசாங்கம் முயற்சிசெய்து வருகின்றது. இதன் ஒருகட்டமாக ஆறாயிரம் பேர் திரட்டப்பட்டுள்ளதாகவும், மேலும் நன்காயிரம் பேரை திரட்ட தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் ஈடுபடுவதற்காக கடந்த செப்டெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் மூவாயிரம் பேர் திரட்டப்பட்டனர். அவர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி வழங்கப்பட்டு நிரந்தர சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர். மேலும் மூவாயிரம் பேருக்கு இப்பொழுது பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் ஏப்பிரல் மாதமளவில் பயிற்சியை முடித்துக் கொள்வர். மேலும் நாலாயிரம் பேரை சேர்த்துக் கொள்ள சிறிலங்கா அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

இதேவேளை விடுமுறையில் சென்று இராணுவத்திற்குத் திரும்பாதவர்களை தேடிக் கண்டுபிடிக்க கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன.

## எறிகணை வீச்சு

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாம் நிலைகளிலிருந்து தொண்டமானாறு அண்டிய பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலை 4 மணியளவில் ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. சேதங்கள் எதுவும் ஏற்பட்டதாக தெரியவில்லை.


வடமராட்சிப் பகுதியில் கடந்த இரண்டு தினங்களாக விமானங்களின் நடமாட்டங்கள் அதிகரித்திருந்தன. நேற்று முன்தினம் தொண்டமானாறு பகுதியை உலங்கு வானூர்தி ஒன்று நோட்டமிட்டது. (யோ)

## வானத்தில் கோளங்கள்

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று மாலை 6-50 மணியளவில் நான்கு பொன்னிற கோளங்கள் காணப்பட்டன, இவை சிறிது நேரத்தில் சிதறல்களாக காணப்பட்டதுடன் வெண்ணிறப் புகையும் காணப்பட்டது.

இது காற்று மண்டலத்

(3 ஆம் பக்கம் பார்க்க)



ஈழநாதம் மூன்றாம் ஆண்டு நிறைவு சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சி. ஸ்ரீகணேசலிங்கம் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனிடம் பரிசிலைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

## நன்றி

ஈழநாதம் மூன்றாவது ஆண்டு நிறைவுப் போட்டிகளில் பங்குபற்றியோர், ஆண்டு விழாவில் கலந்து கொண்டோர், வாழ்த்துக் கவிதைகள், செய்திகள், மடல்கள் அனுப்பியோர், விளம்பரங்கள் தந்தோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## அரசியலில் பெரும் சக்தியாக ராணுவம் உருவாகிவிட்டது

### ஆட்சியை கைப்பற்றும் நிலையும் ஏற்படலாம்

(லண்டன்)

சிறிலங்கா இராணுவம் கடந்த பத்து ஆண்டுகளில் ஒரு முக்கியமான சக்தியாக மாறியுள்ளது. எண்பதுகளில் பெயரளவில் இருந்துவந்த இராணுவம் இன்று பெரும் சக்தியாக உள்ளது. அப்பொழுது 10,000 பேர்கூட அதில் இருக்கவில்லை. இப்பொழுது 1,50,000பேர் ஆயுதப்படையி... கக் கட்டுப்பாடோ இல்லை. கட்டுப்பாடில்லாத காரணத்தினால் மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன. இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளினால் சர்வதேச மனித உரிமை நிறுவனம் போன்ற அமைப்புக்கள், உதவிவழங்கும் நாடுகள் என்பன அதிர்ச்சியடைந்துள்ளன. இந்த நிலையில் மனித உரிமை தொடர்பாக வலியுறு... மையின்மையும் காணப்படுகிறது. உயர் தலைவர்கள் பலர் புலிகளால் கொல்லப்பட்டமை சாதாரண சிப்பாய்களின் மனநிலையையும் உறுதியையும் பாதித்துள்ளது.

சிங்களச் சமுதாயம் இன்று இராணுவ மயமாகிக்கொண்டு போகிறது. இந்த மாற்றம் இராணுவம் அரசைக் கைப்பற்றும் நிலைக்குக்கொண்டு...

## அங்கிலிக்கன் ஆயர் யாழ். வருவார்

(கொழும்பு)

ஆங்கிலத் திருச்சபை ஆயர் கென்னத் பர்னாண்டோ புத்திஜீவிகள் குழுவுடன் அடுத்த வார ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வர உத்தேசித்துள்ளதாக...

## கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'குமாரி' என்ற கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும்வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளருக்கும் மேற்படி கப்பலின் கப்டனுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் 4.30 மணி வரையுமே...

# திரட்ட அரசாங்கம் முடிவு

நேற்று முன்தினம் மதாண்ட மாணாறு பகுதியை உலங்கு வானூர்தி ஒன்று நோட்டமிட்டது. [யோ]

## 3 மாதப் பயிற்சி கிடைக்குமாம்

(கொழும்பு)

இராணுவத்திற்கு மேலும் பத்தாயிரம் பேரை சேர்த்துக்கொள்ள சிறிலங்கா அரசாங்கம் முயற்சிசெய்து வருகின்றது. இதன் ஒருகட்டமாக ஆறாயிரம் பேர் திரட்டப்பட்டுள்ளதாகவும், மேலும் நன்காயிரம் பேரை திரட்ட தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் ஈடுபடுவதற்காக கடந்த செப்டெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் மூவாயிரம் பேர் திரட்டப்பட்டனர். அவர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி வழங்கப்பட்டு நிரந்தர சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மூவாயிரம் பேருக்கு இப்பொழுது பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் ஏப்பிரல் மாதமளவில் பயிற்சியை முடித்துக் கொள்வர். மேலும் நாலாயிரம் பேரை சேர்த்துக் கொள்ள சிறிலங்கா அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

இதேவேளை விடுமுறையில் சென்று இராணுவத்திற்குத் திரும்பாதவர்களை தேடிக் கண்டுபிடிக்க கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன.

## அரசியலில் பெரும் சக்தியாக ராணுவம் உருவாகிவிட்டது

### ஆட்சியை கைப்பற்றும் நிலையும் ஏற்படலாம்

(லண்டன்)

சிறிலங்கா இராணுவம் கடந்த பத்து ஆண்டுகளில் ஒரு முக்கியமான சக்தியாக மாறியுள்ளது. எண்பதுகளில் பெயரளவில் இருந்துவந்த இராணுவம் இன்று பெரும் சக்தியாக உள்ளது. அப்பொழுது 10,000 பேர்கூட அதில் இருக்கவில்லை. இப்பொழுது 1,50,000பேர் ஆயுதப்படையிலுள்ளனர். இவ்வாறு பி.பி.சி தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது. அதில் மேலும்;

இராணுவம் இவ்வளவு பல்கிப் பெருகியதன் காரணமாக உள்நாட்டில் கடுமையான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மிக விரைவாக இராணுவ சேவைக்குக் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சமாளிக்க அரசு சிரமப்படுகிறது. கடுமையான பயிற்சியோ, ஒழுக்கக் கட்டுப்பாடோ இல்லை. கட்டுப்பாடில்லாத காரணத்தினால் மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன. இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளினால் சர்வதேச மனித உரிமை நிறுவனம் போன்ற அமைப்புக்கள், உதவிவழங்கும் நாடுகள் என்பன அதிர்ச்சியடைந்துள்ளன. இந்த நிலையில் மனித உரிமை தொடர்பாக வலியுறுத்துகின்றன.

இராணுவம் தன்னைப்பாதுகாத்துக்கொள்வதில் உறுதியாக இருக்கின்றது. இராணுவத்தினர் மீது வழக்குத் தொடரமுடியாது என்ற சட்டத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று இராணுவத்தின் முடிவுதான் இறுதியாக உள்ளது என இராணுவம் உணர்ந்துள்ளது. இராணுவத்தின் மத்தியில் எரிச்சலும் பொறுமையின்மையும் காணப்படுகிறது. உயர் தலைவர்கள் பலர் புலிகளால் கொல்லப்பட்டமை சாதாரண சிப்பாய்களின் மனநிலையையும் உறுதியையும் பாதித்துள்ளது.

சிங்களச் சமுதாயம் இன்று இராணுவ மயமாகிக்கொண்டு போகிறது. இந்த மாற்றம் இராணுவம் அரசைக் கைப்பற்றும் நிலைக்குக்கொண்டு செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வானத்தில் கோளங்கள்

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று மாலை 6-50 மணியளவில் நான்கு பொன்னிற கோளங்கள் காணப்பட்டன. இவை சிறிது நேரத்தில் சிதறல்களாக காணப்பட்டதுடன் வெண்ணிறப் புகையும் காணப்பட்டது.

இது காற்று மண்டலத்

(3 ஆம் பக்கம் பார்க்க)


## நன்றி

ஈழநாதம் மூன்றாவது ஆண்டு நிறைவுப் போட்டிகளில் பங்குபற்றியோர், ஆண்டு விழாவில் கலந்து கொண்டோர், வாழ்த்துக் கவிதைகள், செய்திகள், மடல்கள் அனுப்பியோர், விளம்பரங்கள் தந்தோர் அனைவருக்கும்எமதுநன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## அங்கிலிக்கன் ஆயர் யாழ். வருவார்

(கொழும்பு)

ஆங்கிலத் திருச்சபை ஆயர் கென்னத் பர்னாண்டோ புத்திஜீவிகள் குழுவுடன் அடுத்த வார ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வர உத்தேசித்துள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.



ஈழநாதம் மூன்றாம் ஆண்டு நிறைவு சிறு கதைப் போட்டியில் பரிசு பெற்ற சி. ஸ்ரீகணேசலிங்கம் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரனிடம் பரிசிலைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

## கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'குமாரி' என்ற கப்பலில் இருந்து பொருள்களைஇறக்கும்வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளருக்கும் மேற்படி கப்பலின் கப்டனுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் 4.30 மணி வரையுமே இத்துறைமுகத்தில் கப்பல் தரி

(3ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை ஹிந்தி பிரசார அலுவலகத்தில்குண்டுவெடிப்பு

### தமிழ் இளைஞர் எழுச்சி மையம் காரணம்?

(சென்னை)

சென்னை தியாகராஜ நகரிலுள்ள இந்திப் பிரசார சபா அலுவலகத்திலுள்ள இந்திப் புத்தகக் கடையில் நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. இதனால் சபா கட்டடமும், அதற்கு அருகிலுள்ள கட்டடங்களும் அதிர்ந்தன.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் எவரும் காயப்படவில்லை எனச் சென்னைப் பொலிஸ் தரப்புச் செய்திகள் கூறுகின்றன. சம்பவம் நடந்த இடத்துக்கு சென்னை நகரப் பொலிஸ் கமிஷனர் ஆர். ராஜகோபாலன் மோப்பம் பிடிக்கும் நாய்களுடன் விரைந்து சென்று விசாரணை மேற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி சேகரிப்பு நேர அட்டவணை

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புநிதி சேகரிப்பு இன்று சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முற்பகல் 9 00 மணி தொடக்கம் 11. 00 மணிவரை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும், முற்பகல் 11. 30 மணி தொடக்கம் 2. 30 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், சாவகச்சேரி. பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 3. 00 மணி தொடக்கம் 5. 00மணி வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் நாளை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முற்பகல் 8 00 மணி தொடக்கம் 11. 00 மணிவரை மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும் உடுவில் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பிற்பகல் 2. 00 மணி தொடக்கம் 4. 00 மணி வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் மேற்கொள்ளப்படவுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## தமிழகத்தில் பிரபாகரனுக்கு இன்றும் பெரும் ஆதரவு

### முன்னாள் மத்திய அமைச்சர் ஆதங்கம்

(சென்னை)

"தமிழ் நாடு கரையோரப் பகுதியிலும், கோவைப் பகுதியிலும் மக்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் போற்றுவதை நேரில்கண்டேன்" இவ்வாறு முன்னாள் இந்திய உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தமிழகத்தில் விடுதலைப்புலிகளை முற்றாக அழித்து விட்டோம் என அரசு கருதுவது தவறானது. அவர்கள் தற்பொழுதும் தமிழகத்தில் உள்ளனர். இது ஆபத்தானது. எனவே இதனைக்களையநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றார்.

## வீரச்சாவு



வீரவேங்கை அன்புதாஸ்

(யாழ்ப்பாணம்)

17-02-93 அன்று யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் போராளி வீரவேங்கை

(3ஆம் பக்கம் பார்க்க)

வரி
விளம்பரம்

### துளிர்

தமிழ் நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ். மற்றும் சலனம், சுபமங்களா, முன்றில், ஆகவே, சாளம், நந்தனா போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன விரைந்திடீர், வசந்தம் புத்தக நிலையம் 405, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [4061]

### நீமோல் -கிருமியகற்றி

நோய்க்கிருமிகளிடமிருந்து பாதுகாப்புப் பெற, சரப்பான் பூச்சியை அகற்ற மலசலகூடம் குளியலறைகளில் "நீமோல்" கிருமியகற்றி பாவியுங்கள் அனைத்து கோப்பிக்கடைகளிலும் கிடைக்கிறது. "மிக்ஸ் வைற்" (சி- 6054)

**ENGLISH COURSE**
**ENGLISH FOR G A.Q.**
**AND DEGREE (ESL)**
Comprehensive integrated Course, 2 Days a week
V, N. KANDASAMY A I B, Part I London Inter, London
87, திருநெல்வேலி றோட் (தபால் கட்டைக்கு அண்மையில்) கொக்குவில். (4316)

## நிர்வாகசபை தெரிவு

தன்னாலை வல்லியானந்தம் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது தலைவராக திரு. நா. விநாயகமூர்த்தியும், செயலாளராக திரு. செ. சுப்பிரமணியமும், பொருளாளராகதிரு.சி. கணபதிப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்

## அப்பியாசக் கொப்பிகள் தட்டுப்பாடு

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மிகவும் அரியதொரு பொருளாகி விட்டது. இவ் ஆண்டு ஆரம்பத்திலேயே தட்டுப்பாடாக இருந்த அப்பியாசக் கொப்பிகள் இப்போது மிகவும் அரிதாகிவிட்டது. இதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது மாணவர்கள், இவர்களது பெற்றோர், இக் கொப்பிகளை வாங்குவதற்காக ஒவ்வொரு கடைகளாக அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது (90)

### யாழ். பல்கலைக்கழகம்

# மகாபொலகொடுப்பனவு

## 2ஆம் தவணைப்பணம்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள்
பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது:

### நான்காம் வருடம்

| | | | |
|---|---|---|---|
| மருத்துவபீடம் | 22 02 93 | 9.00--12.00 | மு.ப |
| கலைப்பிரிவு | 24. 02. 93 | 9.00--12.00 | மு.ப |
| வர்த்தகப்பிரிவு | 02. 03 93 | 9.00- 12 00 | மு.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | | |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | | | |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | | | |

### இறுதிவருட மாணவர்கள்

| | | | |
|---|---|---|---|
| மருத்துவபீடம் -- 1984 / 85, 85 / 86, 86 / 87, 87 / 88 தொகுதிகள் | 22. 02. 93 | 1 30--03.00 | பி.ப |
| கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு (1987 / 88 தொகுதி) | 24. 02. 93 | 1.30--03.00 | பி.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு, பௌதிக விஞ்ஞானப்பிரிவு, உயிரியல் விஞ்ஞானப்பிரிவு (1987 / 88 தொகுதி) | 02 03 93 | 1.30--3.00 | பி.ப |

### இரண்டாம் வருடம்

| | | | |
|---|---|---|---|
| மருத்துவபீடம் | 23. 02. 93 | 9.00--12.00 | மு.ப |
| கலைப்பிரிவு | | | |
| வர்த்தகப்பிரிவு | 01. 03. 93 | 9.00--12 00 | மு.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | | |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 03. 03. 93 | 9 00--12.00 | மு.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | | | |

### மூன்றாம் வருடம்

| | | | |
|---|---|---|---|
| மருத்துவபீடம் | 23. 02. 93 | 1 30--03.00 | பி.ப |
| கலைப்பிரிவு | | | |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 01. 03 93 | 1 30--03 00 | பி.ப |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | | | |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | 03. 03. 93 | 1. 30--03.00 | பி.ப |
| வர்த்தகப்பிரிவு | | | |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

* 1984/85, 85/86, 86/87, 87/88 தொகுதி மருத்துவபீட மாணவர்களின் 1990/91ஆம் கல்வியாண்டுக்குரிய 9ஆவது தவணைப்பணமும் 1987/88 தொகுதி கலை, விஞ்ஞானபீட மாணவர்களின் 1990/91ஆம் கல்வியாண்டுக்குரிய 10ஆவது கொடுப்பனவும் முறையே 22. 2. 93, 24. 2. 93, 02, 03. 93 திகதிகளில் நிதிப் பிரிவில் வழங்கப்படும்.

(சி-6053)

பதிவாளர்.

**Post-graduate Diploma in Public Administration**

Further to the advertisement on the above course, the relevant application forms and prospectus can be obtained from the Senior Asst. Registrar/Academic Branch after a payment of Rs 25/- at the Finance Branch.

Those who have already obtained the application forms should return the old forms and collect the new ones with the prospectus after a payment of Rs. 15/-

Registrar
University of Jaffna

# சமுத்திரா உற்பத்தி நிலையம்

SAMUTHIRA

## பிரதான வீதி, தொல்புரம், சுழிபுரம்.

வளம் பேணுவோம்; வளமுடன் வாழ்வோம்'

## விநியோகம்

பருத்தித்துறை விற்பனைத் திணைக்களத்தில் 'அ' 'உ' உலர் உணவு அட்டைக்கு சன்லைட், சர்க்கரை, மைசூர்பருப்பு, கெக்ஸ்பிறே பால்மா பைக்கட் ஆகியவை குறைந்த குறித்த விலைக்கு வழங்கி வருகிறது. (யோ)

## வீரவணக்க கூட்டங்கள்

அடம்புலிகள் வலிகாமம் கோட்டத்தில் 1-ஆம், 2 ஆம் மாதங்களில் வீரச்சாவு அடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7. 30 மணிக்கு நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இடம் பெறவுள்ளது நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

*

சாவகச்சேரி வட்டத்தில் 2 ஆம் மாதத்தில் வீரச்சாவு அடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7. 30 மணிக்கு மீசாலை வாணி கல்வி வளர்ச்சிக்கழகத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## நினைவஞ்சலி கூட்டம்

திருக்கோணமலையில் ஜமாலியாக் கடலில் 1990 ஆம் ஆண்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 22 மாவீரர்கள் உட்பட மாசி மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் பொன்னம்மான் மற்றும் அனைத்து மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மாலை 5. 30 மணிக்கு மட்டுவில் பொன்னம்மான் வீடமைப்புத் திட்டத்தில் திருகோணமலை இடம்பெயர்ந்த மக்களால் நடாத்தப்பட இருக்கின்றது,

## நினைவு கூருகின்றோம்...

### 1993-2-20

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - மண்டூர், பாலமுனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

அருட்செல்வம் (சங்கரப்பிள்ளை அருட்செல்வம் - பாலமுனை, மண்டூர் - மட்டு.)

அம்பாறை - தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் பகுதிகளில், வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு, எரிக்கப்பட்ட 106 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

பாண்டியன் (அருள் டேவிட் - தாழங்குடா - மட்டு.)

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 04 தமிழர்கள் - கோட்டைக்கல்லாற்றுப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

யாழ் - நல்லூர் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு அம்பாறை - மல்வத்தைப் பகுதியில் போர் நிறுத்தகாலத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

2-ம் லெப். தரணி (கிருஷ்ணபிள்ளை சுந்தலிங்கம் - கிரான் - மட்டு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்,

(சி-6054)

**ENGLISH COURSE ENGLISH FOR G A.Q. AND DEGREE (ESL)**

Comprehensive integrated Course, 2 Days a week

V. N. KANDASAMY A I B, Part I London Inter, London

87, திருநெல்வேலி றோட் (றயில் கடவைக்கு அண்மையில்) கொக்குவில். (4316)

**Post-graduate Diploma in Public Administration**

Further to the advertisement on the above course, the relevant application forms and prospectus can be obtained from the Senior Asst. Registrar/Academic Branch after a payment of Rs 25/- at the Finance Branch.

Those who have already obtained the application forms should return the old forms and collect the new ones with the prospectus after a payment of Rs. 15/-

Registrar
University of Jaffna
1993 02-18

(சி.6060)

**M. SC. IN BIO-TECHNOLOGY**

"Graduates in chemical, biological, medical, dental, veterinary agricultural, and engineering sciences will be considered. Forward application with biodata.

All applicants will be required to sit for a qualifying examination and a viva.

Address correspondence to Registrar, University of Jaffna".

Closing date 15th of March 1993

REGISTRAR
University of Jaffna
1993 - 02 - 18

(சி.6061)

| | | | |
|---|---|---|---|
| | 2?. 02. 93 | 1.30--03.00 | பி.ப |
| கலைப்பிரிவு வர்த்தகப்பிரிவு வியாபார நிர்வாகப்பிரிவு பௌதிக விஞ்ஞானப்பிரிவு உயிரியல் விஞ்ஞானப்பிரிவு — 1987 / 88 தொகுதி | 24. 02. 93 | 1.30--03.00 | பி.ப |
| | 02 03 93 | 1.30--3.00 | பி.ப |

**இரண்டாம் வருடம்**

| | | | |
|---|---|---|---|
| மருத்துவபீடம் கலைப்பிரிவு | 23. 02. 93 | 9.00--12.00 | மு.ப |
| வர்த்தகப்பிரிவு வியாபார நிர்வாகப்பிரிவு | 01. 03. 93 | 9.00--12.00 | மு.ப |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | 03. 03. 93 | 9.00--12.00 | மு.ப |

**மூன்றாம் வருடம்**

| | | | |
|---|---|---|---|
| மருத்துவபீடம் கலைப்பிரிவு | 23. 02. 93 | 1.30--03.00 | பி.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 01. 03. 93 | 1.30--03.00 | பி.ப |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு வர்த்தகப்பிரிவு | 03. 03. 93 | 1.30--03.00 | பி.ப |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

* 1984/85, 85/86, 86/87, 87/88 தொகுதி மருத்துவபீட மாணவர்களின் 1990/91ஆம் கல்வியாண்டுக்குரிய 9ஆவது தவணைப்பணமும் 1987/88 தொகுதி கலை, விஞ்ஞானபீட மாணவர்களின் 1990/91ஆம் கல்வியாண்டுக்குரிய 10ஆவது கொடுப்பனவும் முறையே 22. 2. 93, 24. 2. 93, 02. 03. 93 திகதிகளில் நிதிப் பிரிவில் வழங்கப்படும்.

பதிவாளர். (சி-6053)

# சமுத்திரா உற்பத்தி நிலையம்

**பிரதான வீதி, தொல்புரம், சுழிபுரம்.**

வளம் பேணுவோம்; வளமுடன் வாழ்வோம்'

குடாநாட்டில் தானியங்கள் உற்பத்தி செய்யும்

# விவசாயிகள் கவனத்திற்கு

நீங்கள் எம்மிடம் கொண்டுவந்து ஒப்படைக்கும் தரமான குரக்கனுக்கு கிலோ ரூபா 24/-ம், நாம் வந்து எடுப்பதானால் கிலோ ரூபா 22/-ம் கொடுப்போம். குடாநாட்டில் எப்பகுதியிலாவது மேல் கூறிய விலைக்குக் குறைவாக எமது சார்பில் குரக்கனைக் கொள்வனவு செய்ய எவருக்கும் நாம் அனுமதி வழங்கவில்லை என்பதனையும் இத்துடன் அறியத்தருகின்றோம்.

ஏனைய தானியங்களும் எம்மால் கொள்வனவு செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

20-2-1993 (சி-6055) -நிர்வாகிகள்

பட்ட இருக்கின்றது. ... நடைபெறும்.

## நினைவு கூருகின்றோம்... 1993-2-20

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - மண்டூர், பாலமுனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

அருட்செல்வம் (சங்கரப்பிள்ளை அருட்செல்வம் - பாலமுனை, மண்டூர் - மட்டு.)

அம்பாறை - தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் பகுதிகளில், வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு, எரிக்கப்பட்ட 106 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

பாண்டியன் (அருள் டேவிட் - தாழங்குடா - மட்டு.)

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 04 தமிழர்கள் - கோட்டைக்கல்லாற்றுப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

யாழ் - நல்லூர் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு அம்பாறை - மல்வத்தைப் பகுதியில் போர் நிறுத்தகாலத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

2-ம் லெப். தரணி (கிருஷ்ணபிள்ளை சுந்தலிங்கம் - கிரான் - மட்டு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்,

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6041)

லங்கா சித்த ஆயுர்வேத
மருத்துவக் கல்லூரி

## பிரவேசம் 1993

விண்ணப்பங்கள் 25-3-93 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 50/- செலுத்தி காரியாலயத்தில் பெற்றுக்கொள்வதுடன் ஏனைய விபரங்களை வாரநாட்களில் கல்லூரி காரியாலயத்தில் காலை 9 மணியில் இருந்து 12 மணிக்குள் நேரில் கேட்டறிந்து கொள்ளவும்.

வைத்திய பரம்பரையில் வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

127, ஸ்ரான்லி வீதி,
(அர்ச்சுனா வீதி)
யாழ்ப்பாணம்.

அதிபர்
சுகந்தன் இன்னாசித்தம்பி

(4307)

வச் செலவீடு 800 கோடி ரூபாவாக இருந்தது. இப்பொழுது 2300 கோடி ரூபாவாக மாறிவிட்டது என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஒப்பாரி வைத்துள்ளார்.

ஆனால் சிறிலங்கா ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தமை இதுதான் முதல் தடவை அல்ல. 1993ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 1992இல் சமர்ப்பிக்கப்பட்ட போதே பிரேமதாசாவும் அவரது அமைச்சர்களும் அடிக்கடி இது பற்றிக் கூறியுள்ளனர். யுத்தம் நிற்குமானால் 2000 கோடி ரூபாவை அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் யுத்தம் பற்றிய சிறிலங்கா அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடோ இதற்கு முரணானதாகும். இதில் அரசின் கொள்கை கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்பது போன்றதாகும். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரேவழி எனத் தெரிவு செய்து செயற்பட்டு வரும் சிறிலங்கா அரசாங்கம் யுத்தச் செலவீட்டைப் பற்றிக் கவலை கொள்வதில் நியாயம் எதுவுமில்லை. இதேவேளை, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்பதைத் தெரிந்து கொண்டும் அதையே பின்பற்றும் நோக்கில் இராணுவ பலத்தைப் பெருக்கி இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுவது ஓட்டைப் பானையில் நீர் நிறைப்பதற்கு ஒப்பானதாகும்.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் உண்மையிலேயே தீர்வு காண விரும்பியிருப்பின் 1991ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களை அரசாங்கம் தவறவிட்டிருக்கமாட்டாது. 1992இன் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் செய்த போதும், அதற்குப் பின்னர் பல கிறிஸ்தவ மதக் குருமார்களும், பௌத்த பிக்குகளும் வந்து சென்ற போதும் விடுதலைப் புலிகள் காட்டிய நல்லெண்ண சமிக்ஞைகளைப் பயன்படுத்தியிருக்கலாம். குறைந்தது அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தையாவது அரசாங்கம் ஏற்று பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட்டிருக்கலாம்.

ஆனால் அரசாங்கம் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண முற்படவில்லை. அவ்வாறன்றி அரசாங்கம் தீர்வு காண முற்பட்டிருக்குமானால் யாராவது ஒருவர் மேற்கொண்ட சமாதான முயற்சிகளை ஊக்குவித்து பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டிருக்கும்.

ஆனால் அரசு அவ்வாறு செய்யவில்லை. மாறாக இராணுவத் தீர்வை நாடிநிற்கின்றது. தேசிய வருமானத்தில் இராணுவச் செலவீடு சுமார் 7 வீதமாகும். இதுஓர் மிகப்பெரிய அளவிலான செலவீடாகும். உலக நாடுகளின் சராசரி இராணுவச் செலவீடு 4.5 ஆகும். அத்தோடு இவ் அதிகரித்த செலவீட்டு விகிதத்தை கட்டுப்படுத்துமாறு உலக நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளும் கோரிக்கை விடுத்த போதும் சிறிலங்கா இராணுவ செலவீட்டை வெட்டியதாக இல்லை.

இவ்வாறாக இராணுவம் தொடர்பான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கும் சிறிலங்கா ஜனாதிபதியும், அவரது அமைச்சரவையும் இராணுவச் செலவீடு அதிகரித்துவிட்டது, நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படுகின்றது என்று கூறுவதில் அர்த்தம் எதுவுமில்லை. யுத்தத்தை தமிழ் மக்கள் மீது திணித்ததும், யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதும் அரசாங்கமே. ஆகையினால் யுத்தத்தை நிறுத்தி பொருளாதாரத்தை வளம்படுத்த வேண்டுமானால் போரை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும். ஆனால்அதுவும் அரசின் கையிலேயே உள்ளது.

---

இணைக்கவல்ல மனைப்பொருளியல் பிரிவுடன் இணைந்து உள்ளூர் மூலப்பொருள்களில் இருந்து சிறந்த புதியரக உணவு தயாரிக்கலில் போட்டியினை நடாத்தவுள்ளது. உள்ளூர் உற்பத்தி பாவனையை ஊக்குவிக்கும் நோக்குடன் நடாத்தப்படவுள்ள இப் போட்டியில் பாடசாலை மாணவர்கள், மகளிர் குழுக்கள், தனியார் நிறுவனங்கள், தனிநபர் என்பவற்றில் ஆண் பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம் என்றும் போட்டியில் பங்குபற்றி சிறந்த உணவு வகைகளை தயாரிப்பவர்கட்கு கவர்ச்சியான பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தயாரிக்கப்படும் உணவு உள்ளூர்பொருள்களை கொண்டதாகவும் போசாக்கானதாகவும் அமைதல் வேண்டும் என்றும் மகளிர் அபிவிருத்திநிலையம் அறிவித்துள்ளது. (22)

## வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் வட - கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பு ஆகஸ்ட் 23 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வங்கியாளர் சங்கம் உதயம்

குடாநாட்டில் வங்கி சேவையை ஒருங்கிணைப்பதற்காக வங்கியாளர் சங்கம் உதயமாகியுள்ளது.

அண்மைக்காலமாக அரச வங்கிகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியன சீர்கெட்டமையால் வங்கி சேவையில் சில சீர்கேடுகளும், முரண்பாடுகளும் நிலவி வந்துள்ளது. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் வங்கி சேவையை ஒருங்கிணைக்கவும் சீராக்கவும் மேற்படி சங்கம் சேவையாற்றும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பாலர் பாடசாலை திறப்பு

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று இராமத்தில் உள்ள நயினாமுனை அகதிகள் முகாமில் போறூட் நிறுவனம் பாலர் பாடசாலை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. இப் பாலர் பாடசாலைத் திறப்பு விழா செம்பியன்பற்று பங்குத் தந்தையின் ஆசியுடன் திறந்து வைக்கப்பட்டது. இம் முகாமில் உள்ள சிறுவர்களின் நலன் கருதியே இப் பாலர் பாடசாலை திறந்து வைக்கப்பட்டதாகவும் இப்பாலர்பாடசாலையில் சுமார் 20 சிறுவர்கள் கல்வி பயில்கின்றார்கள் என்றும் போறூட் நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்தார். (25)

---

ரப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் இருவரின் சடலங்கள் நேற்றுக்காலைகரை ஒதுங்கின. சென்ற 14-ம் திகதி இரவு கிளாலிக் கடலில் சிறிலங்காப் படையின் உலங்கு வானூர்தியின் தாக்குதலால் மரணமானவர்களின் சடலம் என அறியப்படுகின்றது. இதில் ஒன்று முத்துக்குமாரு செல்வக்குமார் (வயது 32) என இனம் காணப்பட்டது. மற்றைய சடலம் நேற்று மாலைவரை இனம் காணப்படாத நிலையில் கிளாலி கரையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சடலத்தின் ஒரு கால் இல்லாத நிலையில் காணப்பட்டது. [86]

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு

## க. பொ. த. (உ. த.) பரீட்சை விண்ணப்பங்கள் வரவில்லை

[யாழ்ப்பாணம்]

1993ஆம் ஆண்டிற்குரிய க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பப் படிவங்கள் பரீட்சைத்திணைக்களத்தினால் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை என தெரியவருகின்றது.

மேற்படி விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ள யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் முயற்சி மேற்கொண்டுள்ளார். இவ்விண்ணப்பப் படிவங்களை தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ள யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகளை தம்முடன் எடுத்துவரும்படி அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இப்பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணம் ஒரு பாடத்திற்கு [illegible]0ரூபாய் எனவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. [பா]

## பத்திரிகை சுதந்திரம் காக்க அமைப்பு ஆரம்பம்

[கொழும்பு]

சிறிலங்காவில் பத்திரிகை சுதந்திரம் மீறப்படுவதை கண்டித்து அதனை எதிர்த்து போராட 'பத்திரிகை சுதந்திரமும் ஜனநாயகமும்' என்ற அமைப்பு நேற்று முன்தினம் கொழும்பு கொள்ளுப்பிட்டி 'ஒரு கெதர'வில் உருவாக்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. பிரபல பத்திரிகையாளர் ரிச்சாட் டி சொய்சா கொலை செய்யப்பட்டு மூன்றாம் ஆண்டு நிறைவில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

## மீளக் குடியமர்வோருக்கு பாதுகாப்பே முக்கியம்

மன்னார் ஆயர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மக்களை மீளக் குடியமர்த்துவது பெரிதல்ல; அவர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படுவதே இன்றியமையாதது என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரித்

மன்னார்.

மீளக் குடியமர்த்தப்பு[illegible] மக்களின் பிரதிநிதிகளுடன் மன்னார் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் மன்னார் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது என சிறிலங்கா அரசு கூறி வருகிறது. மக்களை குடியேற்றுவதில் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒரு ஊக்கியாக மட்டுமே செயல்பட முடியும். இந்த நடவடிக்கைகளுக்கு சிறிலங்கா அரசே [illegible] உள்ளது. எனவே மீளக் குடியமர்த்தப்படும் மக்களுக்கு பாதுகாப்பே பிரதானமானது என அவர் தெரிவித்தார்.

---

### வீரச்சாவு

அன்புதாஸ் [செபமாலை ஆனந்தன், மாமுனை, செம்பியன்பற்று] வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

---

### சென்னை

கொண்டாரி.

குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்த கட்டடத்துக்குச் சற்றுத் தொலைவில் இரண்டு துண்டுப் பிரசுரங்கள் தமிழ் இளைஞர் எழுச்சி மையம் என்ற பெயருடன் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று போலிசார் தெரிவித்துள்ளனர்.

---

வாக்குப் பெட்டிகளுக்குத் தேவையான பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கும் சேர்த்தே வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கலிபர் தாக்குதல்

தீவகப் பகுதி கரையோரக் காவல் நிலைகளில் உள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் நேற்று முன்தினம் நண்பகல் 12 30 மணியளவில் அராலித்துறை கடற்பரப்பினை நோக்கி கலிபர் தாக்குதல் நடாத்தினர்.

மேற்படி தாக்குதலை அடுத்து ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன. சேதவிபரம் தெரியவில்லை.

## 35 மில்லியன் முற்பணம்

[யாழ்ப்பாணம்]

அத்தியாவசியப் பொருள்களை கப்பல் மூலம் குடாநாட்டுக்குள் எடுத்துவருவதற்கு வசதியாக சுமார் 35 மில்லியன் ரூபா முற்பணம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது யாழ். செயலகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

## விரிவுரைகள்

புறநிலைப்படிப்பின் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் கிராம அலுவலர்களுக்கான பயிற்சி நெறியின் 3-வது வார விரிவுரை வகுப்புக்கள் இன்றும் நாளையும் பல்கலைக் கழகத்தில் இடம்பெறும். தலைமைத்துவம், வெகுசனத் தொடர்பியல், முகாமைத்துவம் பற்றிய விரிவுரைகளும், செய்முறை வகுப்புக்களும் இதில் இடம்பெற உள்ளன.

---

### வானத்தில்

இற்கு மேலேயுள்ள காந்தத் தன்மையினை அளவிட [illegible] கோட்டையிலிருந்து ஏவப்பட்ட இரு ரொக்கெட்டுகள் வெளியிட்ட பேரியம் புகையினால் ஏற்பட்டதென தெரிய வருகிறது.

---

### கப்பலில்

இது நின்று உணவுப் பொருள்களை இறக்குவது வழமையாகும். இனிமேல் மாலை 6 30 மணிவரையும் கப்பல் தரித்து நிற்கும். இதனால் அதிக நேரம் இறக்கும் வேலைகளை மேற்கொள்ள முடியும். இந்த அடிப்படையில் பொருள்களை இறக்குவதற்கு தொழிலாளர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேலதிக கப்பல் ஒன்று இத்துறைமுகத்துக்கு பொருள்களை எடுத்து வருவதனாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ([illegible])

## அழைப்பு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அதிபர்கள் நினைவாக நடாத்தும் பேருரை வரிசையில்

### அமரர் மு. கார்த்திகேசன்

(முன்னாள் அதிபர் யா இ க)
அவர்கள் நினைவாகப் பேருரை

**"எண்பதுகளின் பின் ஈழத்துக் கவிதைகளின் போக்கு"**

வித்துவான் க. சொக்கலிங்கம் M, A.

1993 2-20ஆம் திகதி சனிக்கிழமை

இன்று, மாலை 3.30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்துக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
(சி-6058)

## இளங்கலைஞர் மன்றத்தின்

## இசை விழா

### கெயர் ஸ்தாபனத்தின் ஆதரவில்

### 12ஆம் நாள் நிகழ்ச்சிகள்

### 20 - 2-93 (சனி) இன்று

### இடம்: மன்றக் கலாமண்டபம்

மாலை 4.00 — 5.00 மங்கள இசை:
நாதஸ்வரம்: எஸ் எஸ். சந்தானம்
எஸ். சிவசுப்பிரமணியம்
எஸ். செல்வக்குமார்
எஸ். காளிதாஸ்
தவில்: ஆர். ஜெயராசா
எஸ். உதயகுமார்
எஸ். கணேசமூர்த்தி
எஸ். கண்ணன்

5.00 — 5.20 பாட்டு:
ஜி கமலாஜோதி, ஆர். ரதிமலர், எஸ். துளசி,
ஐ. மாமதி, ஜெ. ஜானகி, பி. ஷர்மிளா,
ஆர். புஸ்பமலர், வி. பெற்றிசியா, பி. இராமதேவி
வயலின்: சுமத்திரா கணேசன்
மிருதங்கம்: எஸ், ஹரிதரன்

5.20 — 5.30 மிருதங்க இசை:
பி. திருக்குமரன், எஸ். கமலதாஸன்

5.30—6.00 பாட்டு: பி: ரமேஷ்
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: சதா வேல்மாறன்

6.00 — 6.15 வயலினிசை
ரஞ்சனி ராமலிங்கம்
மிருதங்கம்: எஸ். கமலதாஸன்

6.15 — 7.00 பாட்டு:
சாரதா சச்சிதானந்தம்
வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: எம். சிதம்பரநாதன்

## கூட்டணி வைப்பதானால் மத்தியகுழு விவாதம் தேவை

**— அநுரா பண்டாரநாயக்கா**

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்கால தேர்தல் கூட்டணி தொடர்பாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைப்பாளர்களுக்கும் அநுரா பண்டாரநாயக்க கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இக்கடிதத்தில் இடது சாரிகளுடன் தேர்தல் கூட்டணி வைப்பது பற்றி கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களோடும், அமைப்பாளர்களோடும் மத்திய குழு விவாதிக்க வேண்டுமெனவும், அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஆறாம் மாதத்தில் அலைமோதும் நினைவுகள்

எங்கள் மைந்தனாய்: 01 — 04 — 1971



செங்கள மாவீரனாய்: 27 — 08 — 1992

1992-08-27 ம் திகதி மாதகலில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

### கப்டன் வன்னியன் (கிங்ஸ்லி)

### [கணபதிப்பிள்ளை கணநாதன்]

ஈழ மண்ணின் அன்பினிலே
ஈர்த்தனையோ வன்னியா
மாதகல் பகுதியிலே அன்று நீ
வீரச்சமர் புரிகையிலே - தமிழ்
மண்ணுக்கே இன்னுயிர் ஈந்தாய்
இன்னுயிர் போதாதென்று உன் உடலையே
ஈழ மண்ணிற்கு உரமும் இட்டாய்
மாறாது எம் பாசம் ஆறாது எம் துயரம்
மறு அவதாரம் எடுத்திடு எம் கிங்ஸ்லியே
தமிழ் ஈழத்தின் வேங்கையாய்!

இவருடன் வீரச்சாவடைந்த 9 போராளிகளையும் இத் நாளில் நினைவு கூருகின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, அண்ணாமார்,
அக்கா, தங்கை.

இல. 606, கொக்காவில் வீதி,
துணுக்காய்.
(4289)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 19-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8370

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

40-6979, 24-1785, 22-8075, 26-989 24-6944, 28-2145, 24-3906, 41-6533, 41-9746, 24-3258, 27-6583, 26-0536, 27-4238, 27-6563, 26-4691, 26-3654, 26-2414, 27-9756

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-8674, 42-3732, 28-0427, 26-8052, 28-9633, 26-3177, 42-4126, 27-4664, 41-3432, 42-5590, 27-3803, 26-5281, 41-6296, 42-0970, 22-3088, 42-3325, 28-8367, 41-9396

## 24-ம் ஆண்டு நினைவஞ்சலி

அண்ணாமலை இசைத் தமிழ் மன்ற ஸ்தாபகர்

### சங்கீதபூஷணம்

### ஆ. நமசிவாயம் அவர்கள்



"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள்.

தமிழகம்,
திருநெல்வேலி,
(4317)

## ஆங்கில வகுப்புக்கள்

ஆங்கில ஆசிரியர்
தெரிவு பரீட்சை
மார்ச் 06 - 1993

துரித மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்
1991 / 92
அரசாங்க வினாத்தாள்
கைவசம் உள்ளது.

## 'மரபுவழி நாட்டுக்கூத்தினை பாதுகாப்போம்'

ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள்,
மூத்த கலைஞர்கள் ஒன்றுசேர்ந்து

### செல்லையா - மெற்றாஸ்மயில்

## 12ஆம் நாள் நிகழ்ச்சிகள்

## 20-2-93 (சனி) இன்று

### இடம்: மன்றக் கலாமண்டபம்

மாலை 4.00 — 5.00 மங்கள இசை:

நாதஸ்வரம்: எஸ். எஸ். சந்தானம்
எஸ். சிவசுப்பிரமணியம்
எஸ். செல்வக்குமார்
எஸ். காளிதாஸ்

தவில்: ஆர். ஜெயராசா
எஸ். உதயகுமார்
எஸ். கணேசமூர்த்தி
எஸ். கண்ணன்

5.00 — 5.20 பாட்டு:
ஜி கமலாஜோதி, ஆர். ரதிமலர், எஸ். துளசி, ஐ. மாமதி, ஜே. ஜானகி, பி. ஷர்மிளா, ஆர். புஸ்பமலர், வி. வெற்றிசெல்வா, பி. இராமதேவி
வயலின்: சுமத்திரா கணேசன்
மிருதங்கம்: எஸ். ஹரிதரன்

5.20 — 5.30 மிருதங்க இசை:
பி. திருக்குமரன், எஸ். கமலதாஸன்

5.30—6.00 பாட்டு: பி: ரமேஷ்
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: சதா வேல்மாறன்

6.00 — 6.15 வயலினிசை
ரஞ்சனி ராமலிங்கம்
மிருதங்கம்: எஸ். கமலதாஸன்

6.15 — 7.00 பாட்டு:
சாரதா சச்சிதானந்தம்
வயலின்: எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: எம். சிதம்பரநாதன்

இரவு 7.00 — 7.15 மங்கள விளக்கேற்றல்
சோ. சங்கரலிங்கம் (ஹரன் வர்த்தகர்)
எஸ். பி. சண்முகநாதன் (முகாமையாளர், ஆர். வி. ஜீ.)
எஸ். பி. ராசையா [விற்பனை முகாமையாளர் ஆர் வி ஜீ)
தலைவர்: திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் (முன்னாள் இராமநாதன் கல்லூரி அதிபர்)
சிறப்பு விருந்தினர்: திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை (திட்டப்பணிப்பாளர் அகில உலக கெயர் யாழ்ப்பாணம்)

7.15 — 8.15 இசைக் கச்சேரி
பாட்டு: எஸ். குமாரசாமி
வயலின்: ஆர். எஸ் கேசவமூர்த்தி
மிருதங்கம்: கே. கண்ணதாசன்


8.15 — 9.30 பரதநாட்டியம்
பாரதி கலாமன்ற மாணவிகள்
நட்டுவாங்கம்: ஞானமணி செல்லையா
பாட்டு: வர்ணராமேஸ்வரன்
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி

வாழ்த்துவோர்:

**ரூபன் ஸ்ரோர்ஸ்**

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி

(சி-5965)

1971 — — 1992

1992-08-27 ம் திகதி மாதகலில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

## கப்டன் வன்னியன் (கிங்ஸ்லி)

### [கணபதிப்பிள்ளை கணநாதன்]

ஈழ மண்ணின் அன்பினிலே
ஈர்த்தனையோ வன்னியா
மாதகல் பகுதியிலே அன்று நீ
வீரச்சமர் புரிகையிலே - தமிழ்
மண்ணுக்கே இன்னுயிர் ஈந்தாய்
இன்னுயிர் போதாதென்று உன் உடலையே
ஈழ மண்ணிற்கு உரமும் இட்டாய்
மாறாது எம் பாசம் ஆறாது எம் துயரம்
மறு அவதாரம் எடுத்திடு எம் கிங்ஸ்லியே
தமிழ் ஈழத்தின் வேங்கையாய்!

இவருடன் வீரச்சாவடைந்த 9 போராளிகளையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, அண்ணாமார், அக்கா, தங்கை.

இல. 606, கொக்காவில் வீதி, துணுக்காய்.

(4289)

ஆ. நமசிவாயம் அவர்கள்



"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள்.

தமிழகம்,
திருநெல்வேலி.

(4317)


'மரபுவழி நாட்டுக்கூத்தினை பாதுகாப்போம்'

ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், மூத்த கலைஞர்கள் ஒன்றுசேர்ந்து

**செல்லையா - மெற்றாஸ்மயில்**

தயாரித்து, நெறியாண்டு முல்லைத்தீவு ஆட்டமுறையில்

வழங்கும்

# "கண்ணகி வழக்குரை"

### ஆட்ட நாட்டுக்கூத்து

நாளை 21-2-93 ஞாயிற்றுக்கிழமை இரவு 9.15 மணிக்கு இளங்கலைஞர் கலாமண்டபத்தில் [சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர்] நடைபெறுகின்ற இசைவிழாவில் இடம் பெறுகின்றது.

முல்லைத்தீவு கோவலன்கூத்து ஆசிரியரில் ஒருவரான திரு. க. தளையராசசிங்கமும் கலந்துகொள்கிறார்.

அன்பளிப்பு:-

**மக்மிலன் புத்தகசாலை**
3, பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீகாந் புத்தகசாலை**
(போட்டோ பிரதி எடுத்து கொடுக்கப்படும்)
நல்லூர்.

(சி-6026)

**ஆங்கில வகுப்புக்கள்**

ஆங்கில ஆசிரியர் தெரிவு பரீட்சை
மார்ச் 06 - 1993

தமிழ் மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்
1991 / 92
அரசாங்க வினாத்தாள் கைவசம் உள்ளது.

ஷேக்ஸ்பியர் அக்கடமி
04, பிள்ளையார் கோயில் ஒழுங்கை,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(4318)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப்பரீட்சை

**B A; B. COM. PART I**

பொருளியல்
S. வரதராஜன்
B. A (Hons)

Micro Econ 10-11
Macro Econ 3-4
சனி ஞாயிறு
ஆரம்பம்:
20 - 2 - 93

குறிப்பு: 21 - 2 - 93 க்குப் பின்பு புதிதாக மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6057)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.